
பக்கங்கள்:-26

# காலை முரசு



வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் 'முரசு' குழுமத்தின் இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 16 | திங்கட்கிழமை | 01.01.2024 | அதிர்வு 153



# தீர்க்கமான முடிவை தமிழர்கள் எடுக்கின்ற ஆண்டுதான் 2024

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை

(சீ.ஏ.தமிழ்மாறன்)

**“பிறந்துள்ள 2024 ஆம் ஆண்டு தமிழர்களாகிய எமக்குத் தீர்க்கமான முடிவுகளை எடுக்கக் கூடிய ஆண்டாக இருக்கும் என்று நம்புகின்றோம்.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.** 6

# நரியின் முன் மண்டியிடும் நபர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை

## மாத்தறை நிகழ்வில் ரணிலைப் போட்டுத் தாக்கிய சஜித்

“ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியாக மாற்றமடைவதைக் கண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சமடைமந்துள்ளார். அதன் காரணமாகவே ஊடக வலையமைப்புக்கள் ஊடாக எமக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் எமது உயர்வைத் தடுக்க முடியாது.”

– இவ்வாறு 06



# தேர்தலுக்கு முன் வீறாப்புப் பேசுவோர் பின்னர் அமைதியாகி விடுவார்களாம்

## மொட்டுவின் வெற்றியை எவராலும் தடுக்க முடியாது என்கிறார் மஹிந்த



“ஐக்கிய மக்கள் சக்தியின் பரந்துபட்ட கூட்டணி ஊடாகவோ அல்லது வேறு கட்சிகள் மூலமாகவோ ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் வெற்றியைத் தடுக்க முடியாது.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா 06




வாசகர்களுக்கு புது வருட வாழ்த்துக்கள்.

இந்த ஆண்டின் முதலாவது நாளில், நான் புதிதாக எதுவும் என் பத்தியில் எழுதப் போவதில்லை.

இந்த வருடத்தின் முதல் நாளில் எங்களின் பொக்கற்றுகள் எவ்வாறு கரையப் போகின்றன என்பது தொடர்பில் முகநூல் பக்கம் ஒன்றில் வெளியான விவரங்களை அப்படியே மீள்பதிவு செய்கிறேன். இன்றைய விலை ஏற்றம் எப்படி இருக்கும் 06

# சுவாமி விவேகானந்தர் சிலை அமைக்க இன்று கல்லடி பாலத்தில் அடிக்கல் நடல்!

(வி.ரி.சகாதேவராஜா)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் நூற்றாண்டு நிறைவு விழாத் தொடரை ஆரம்பித்து வைக்கும் முகமாக இன்று (01) திங்கட்கிழமை மட்டக்களப்பு கல்லடி பாலத்தில், இராமகிருஷ்ணமிஷனை ஸ்தாபித்த வீரத் துறவி சுவாமி விவேகானந்தருக்குச் சிலை அமைக்க அடிக்கல் நடப்படவுள்ளது.

இன்று பகவான் ராமகிருஷ்ணரின் கல்ப தரு தினம் ஆகும்.

இன்றைய தினம், மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் முன்னிலையில் அரச அதிபர் உயர் அதிகாரிகள் மற்றும் இராம கிருஷ்ண மிசன் அபிமானிகள் சகிதம் அடிக்



கல் நடும் விழா நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கல்பதரு தினத்தில் அடுத்த நிகழ்வாக, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் ராமகிருஷ்ண மிஷனுடன் இணைந்து நடத்தும் தையல் மனையியல் மற்றும் கைவினைப் பொருள் பயிற்சி நெறி அங்குரார்பண வைபவம் கிரானில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு கிரான் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபு தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மற்றும் உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்த ஜீ மகராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு அதிதியாக உதவி பிரதேச செயலாளர் எஸ்.யோகராஜா கலந்து கொள்வார்.

## பஸ் கட்டணங்களையும் உயர்த்த வேண்டி நேரும்

### தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் கூறுகிறது



இன்று முதல் அமுலாகும் வற் வரி திருத்தம் காரணமாக பஸ் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டியேற்படுமென அகில இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்று முதல் ஓட்டோக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி முதலாவது கிலோ மீற்றருக்கான கட்டணத்தில் எவ்வித மாற்றங்களும் இல்லையென அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

2 ஆவது கிலோ மீற்றருக்கான கட்டணம் 80 ரூபாவில் இருந்து 100 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், இன்று முதல் அமுலாகும் வகையில். சோற்றுப்பொதி, ப்ரைட் ரைஸ், கொத்துரொட்டி உள்ளிட்ட உணவுகளில் விலையை 25 ரூபாவினாலும், தேநீரின் விலையை 5 ரூபாவினாலும், பால் தேநீரின் விலையை 10 ரூபாவினாலும் அதிகரிக்கவுள்ளன என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறே, இன்று முதல் அமுலாகும் வற் வரி திருத்தத்துடன், நீர் கட்டணமும் 3 சதவீதத்தால் அதிகரிக்கும் என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

## கொழும்பில் துப்பாக்கிச்சூடு

### ஒருவர் படுகாயம்




கொழும்பு, தொட்லங்க பகுதியில் நேற்று இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்றும், அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# மோசடிக்காரர்களிடமிருந்து ஆட்சியை பறிக்க வேண்டும்



## சரத் பொன்சேக்கா கூறுகிறார்

“நாட்டை கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர்களாலேயே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு தேர்தலுக்கான ஆண்டாகும். எனவே அவ்வாறான மோசடிக்காரர்களான அரசியல்வாதிகளிடமிருந்து ஆட்சியைப் பறிப்பதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

“ கடந்த 75 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஆட்சியாளர்களாலேயே நாடு இன்று இவ்வாறான நிலையில் உள்ளது. அந்த வழியில் வந்தவர்களே இன்றும் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றனர்.

எனவே அவர்களது ஆட்சியின் கீழ் குறுகிய காலத்துக்குள் இந்த நெருக்கடிகளிலிருந்து மீள முடியும் என்று மக்கள் எதிர்பார்க்கக் கூடாது.

எனவே மோசடிக்காரர்களான அரசியல்வாதிகள் தொடர்பில் அறிந்து, அவர்களிடமிருந்து ஆட்சியைப் பறிப்பதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்படாவிட்டால் யார் வந்து எந்த வாக்குறுதிகளை வழங்கினாலும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. எனவே ஊழல், மோசடியற்ற நாட்டை நேசிக்கும் தலைவரை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

நிவாரணங்களுக்காகவும், சமூர்த்திக் கொடுப்பனவுகளுக்காகவும் வாக்களித்தால் கடந்த ஆண்டைப் போன்று மீண்டும் அனைத்தையும் இழக்க நேரிடும்.

இந்த வருடம் அரசமைப்புக்கேற்ப அனைத்துத் தேர்தல்களும் நடத்தப்பட வேண்டும். ஆனால் மக்கள் சரியான பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறில்லை எனினும் மீண்டும் மக்கள் ஏமாற்றப்படுவதை எவராலும் தடுக்க முடியாது”– என்றார்.

---

## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



### “தாயகஒலி” பிரதம ஆசிரியர்

***தம்பு சிவா அவர்களின் (தம்பு.சிவசுப்பிரமணியம்)***

### (அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

# சிறுகதைப் போட்டி

**இருபிரிவுகளாக நடத்தப்படும்**

**(பரிசுத் தொகை 1 இலட்சம்)**

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.

* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

***அனுப்ப வேண்டிய முகவரி :***

இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# திருமலையில் சிறீதரனின் சந்திப்புகள்




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்றைய தினம் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி. நோயல் இம்மானுவேல் ஆண்டகை, தென்கயிலை ஆதீனத்தின் முதற் குருமகா சந்நிதானம் தவத்திரு.அகத்தியர் அடிகளார் ஆகியோரை நேரில்சந்தித்து ஆசிபெற்றமையோடு தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டத்தின் பொதுச்சபை உறுப்பினர்களுடனும் கலந்துரையாடியுள்ளார்.





## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் பொறுப்பு ஜெகுவிடம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரான ஜெகு மரியதாசன் அப்பதவிக்கு மேலதிகமாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராகவும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்த கனகேஸ்வரன் மன்னார் மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டதனால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது.

அந்தப் பதவியே தற்போதைய வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரான ஜெகு மரியதாசனிடம் மேலதிகமாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ்சினால் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரான ஜெகு மரியதாசன் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராகவும் பணியாற்றுவார்.

## தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதற்கு திட்டம்



எதிர்வரும் இரண்டு வருடங்களில் வருடாந்த தேங்காய் உற்பத்தியை 360 கோடியாக அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது, நாட்டில் வருடாந்த தேங்காய் உற்பத்தியானது 300 கோடியாகக் காணப்படுகிறது.

அவற்றுள் 170 கோடி தேங்காய்கள் வருடாந்த நுகர்வுக்குப் பயன்படுகின்றன.

அதேநேரம், தேங்காய் ஏற்றுமதியும் அதிகரிக்கப்படவுள்ளது.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் தெங்குக் கன்றுகளை விநியோகித்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## அச்சுவேலிப் பிரதேசத்தில் புகை விசிறும் செயற்பாடு!




அச்சுவேலிப் பகுதியில் டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று மாலை புகை விசிறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைக்குட்பட்ட அச்சுவேலி பகுதியில் அண்மைக்காலமாக டெங்கின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் பொது சுகாதாரப் பரிசோதர்களால் வீட்டுத் தரிசிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன் தொடராக நேற்றைய தினம் அச்சுவேலி பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் புகை விசிறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கடந்த தினங்களில் கோப்பாய் பொது வைத்திய அதிகாரிகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கின் தாக்கத்தினால் உயிரிழப்புகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் மீனவர் என்ற போர்வையில் கட்சி உறுப்பினர் அடாவடி

## நா.வர்ணகுலசிங்கம் கண்டனம்




**"யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீனவர் என்ற போர்வையில் ஒருவர் ஒழுக்கமற்ற முறையில் நடந்துகொண்டுள்ளார். இது கேவலமான செயலாகும்."**

**- இவ்வாறு யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவரும், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உப தலைவருமான நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.**

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் இந்திய இழுவைப்படகுகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இடையே வாக்குவாதம் இடம்பெற்றிருந்த நிலையில் ஓர் அமைப்பிலும் இல்லாத நபர் ஒருவர் ஒழுக்கமற்ற முறையில், சபை நாகரீகமற்ற முறையில், குறுக்கீடு செய்தமையோடு மிகவும் கேவலமான முறையில் பேசினார். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனுக்கு அருகில் சென்று மேசையில் அடித்து பேசியிருந்தமை கேவலமான செயலாகும்.

இவ்வாறு சபை நடவடிக்கையின் போது இடையில் புகுந்து கேவலமாக நடந்துகொண்ட நபரைக் கடற்றொழில் அமைப்பின் பிரதிநிதி என கடற்றொழில் அமைச்சர் தெரிவித்திருந்தார். அவர் எந்த அமைப்பின் பிரதிநிதி என்பதை பகிரங்கமாக கூறவேண்டும். எந்த அமைப்பாக இருந்தாலும் பொதுச் சபை உறுப்பினர்கள் ஊடாகத்தான் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவது வழக்கம். அவ்வாறு பொதுச் சபையினூடாக தெரிவு செய்யப்பட்டிருந்தால் கூட்ட அறிக்கையைக் காட்டட்டும்.

ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்படாது அமைச்சர் சார்பான கட்சி ஆதரவாளர்கள் என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சிலரை அழைத்து வந்து இவ்வாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை குழப்பியமை அராஜகமாகும்.

கட்சி சார்பானவர்களோ, அமைச்சர் சார்பானவர்களோ அந்த அடிப்படையில் கூட்டங்களில் பங்கேற்கட்டும். ஆனால் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் இவ்வாறு பங்கேற்றுக் குழப்பங்களை ஏற்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

கூட்டுறவுத் திணைக்களம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊடாக கடற்றொழில் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. கடற்றொழிலாளர்கள் சமாசங்களுக்கு அன்றைய ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இவ்வாறு உண்மையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்படாத நிலையில், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் அழைத்து வரப்பட்ட சிலராலேயே அராஜகம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கவனத்தில் எடுத்து இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது பார்த்துக் கொள்ள வேண்டும். அத்துடன், உரிய வழிமுறைகள் ஊடாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்." – என்றார்.

# தொலைபேசிக் கட்டணங்கள் இன்று தொடக்கம் அதிகரிப்பு




நாட்டில் உள்ள அனைத்துத் தொலைபேசி நிறுவனங்களும் இன்று முதல் தமது தொலைபேசிக் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளன என அறிவித்துள்ளன.

வற் வரி 15 வீதத்திலிருந்து 18 வீதமாக அதிகரிப்பதால், தொலைத்தொடர்பு சேவைகள் அதற்கேற்ப 3 வீதத்தால் அதிகரிக்கும்.

இதற்கமைய, தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள், இணையச் சேவைக் கட்டணங்கள், கட்டணத் தொலைக்காட்சி சேவைக் கட்டணங்கள் உள்ளிட்ட அனைத்துச் சேவைகளுக்கான கட்டணங்களும் அதிகரிக்கின்றன.

சில நிறுவனங்கள் முற்கொடுப்பனவு அட்டைக்கான கட்டணத்தை உயர்த்தவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பெறும் டேட்டாவின் அளவைக் குறைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிக்கப்பட மாட்டாதாம்!

## பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவிப்பு



அரசாங்கம் வற் வரியை அதிகரித்த போதிலும் பாண் உள்ளிட்ட பேக்கரி பொருள்களின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

வற் வரி இன்று முதல் 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதால் பேக்கரி தொழில்துறையினரும், பேக்கரி உரிமையாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இதன் காரணமாக பாண் உள்ளிட்ட பேக்கரி பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் நாட்டு மக்களுக்காக பாண் உள்ளிட்ட பேக்கரி பொருள்களின் விலையை அதிகரிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வற் வரி அதிகரிப்பினால் ஏற்படும் பாரிய நட்டத்தை பேக்கரி உரிமையாளர்களே சுமக்கவுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடி தீர்வு எட்டப்படும் எனவும் அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
என்பதன் விளக்கம் அதுதான்:-

+ எரிபொருள்கள் விலை 12 வீதத்தால் அதிகரிக்கின்றது.

+ குறிப்பாக 92 ரகப் பெற்றோலின் விலை 40 ரூபாவினால் அதிகரிக்கின்றது.

+ 95 ரகப் பெற்றோல் விலை 35 ரூபாவினால் உயருகின்றது.

+ டீசல் விலை ரூபா 40 ரூபாவினால் அதிகரிக்கின்றது.

+ சமையல் எரிவாயு விலை 16 வீதத்தால் அதிகரிக்கின்றது. அதாவது 12.5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 500 ரூபாவால் அதிகரிக்கின்றது.

+ பஸ் கட்டணம் 15 வீதத்தினால் அதிகரிக்கின்றது.

+ அதாவது குறைந்தபட்ச பஸ் கட்டணம் ரூபா 35 ஆக உயருகின்றது.

+ ஓட்டோக் கட்டணம் இரண்டாவது கிலோமீற்றருக்கு கட்டணம் ரூபா 100 வால் அதிகரிக்கின்றது.

+ PickMe-Uber கட்டணங்கள் 20 வீதத்தால் அதிகரிக்கின்றன.

+ மின்சாரக் கட்டணத்தில் மாற்றம் ஏற்படாத போதும் Solar Panels 20 வீதத்தால் அதிகரிக்கின்றது.

+ நீர்க் கட்டணம் குறைந்தது 3 வீதம் அதிகரிக்கின்றது.

+ தபால் கட்டணம் குறைந்தது 7 வீதத்தால் கூடுகின்றது.

+ அழைப்புக் கட்டணம், இணையச் சேவைக் கட்டணம், கட்டணத் தொலைக்காட்சி சேவைக் கட்டணம் போன்ற அனைத்து சேவைகளுக்கான கட்டணங்களும் அதிகரிக்கின்றன.

+ மோட்டார் சைக்கிள்களின் விலை குறைந்தது ரூபா ஒரு இலட்சத்தினால் அதிகரிக்கின்றது.

+ மொபைல் போன் விலைகள் 35 வீதம் அதிகரிக்கின்றன.

+ அதாவது ரூபா100,000 மதிப்புள்ள மொபைல் போன் நாளை முதல் ரூபா 135,000 ஆக அதிகரிக்கின்றது.

+ நகை மற்றும் தங்க விலைகள் 20 வீதத்தால் அதிகரிக்கின்றன.

+ சிற்றுண்டிகளின் விலை 10 ரூபா வால் அதிகரிக்கின்றது.

+ பால் தேநீர் விலை 10 ரூபாவாலும் சாதாரண தேநீர் விலை 5ரூபாவாலும் அதிகரிக்கின்றது.

+ சோறு மற்றும் கொத்துரொட்டி பார்சல் விலை 25 ரூபாவால் அதிகரிக்கின்றது.

+ பேக்கரி பொருள்களின் விலைகள் ரூபா 5 முதல் ரூபா 15 வரை அதிகரிக்கின்றன.

+ இது போதாதென்று மரக்கறி விலைகள் உச்சத்தை தொட்டு இருக்கின்றன.

+ குறிப்பாக பச்சை மிளகாய் ஒரு கிலோ ரூபா 2,400 ஆக உயர்ந்து இருக்கின்றது.

+ சிவப்பு வெங்காயம் ஒரு கிலோ ரூபா 600 ஆக உயர்ந்து இருக்கின்றது.

+ முட்டை ரூபா 50 ஆக இருக்கின்றது.

## தீர்க்கமான முடிவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
அவர் மேலும் கூறுகையில்,

"மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டானது இன, மத, கட்சி வேறுபாடின்றி நாட்டு மக்களுக்குச் சமாதானம், மகிழ்ச்சி, சுபீட்சம் மிக்கதாக அமைய வேண்டும்.

இந்த ஆண்டு தமிழ் மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டு வருகின்ற ஆண்டாகத் திகழ வேண்டும்.

இந்தப் புதிய ஆண்டிலாவது புதிய அரசமைப்பின் ஊடாகத் தீர்வு காணப்பட வேண்டும். ஆட்சியில் எந்த அரசு இருந்தாலும் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் தமிழர்களாகிய நாம் தீர்க்கமான முடிவுகளை இந்த ஆண்டில் எடுப்போம்.

அனைவருக்கும் எனது இனிய புதுவருட வாழ்த்துக்கள்." - என்றார்.

## தேர்தலுக்கு முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"கடந்த இரண்டு பிரதான தேர்தல்களிலும் தோல்வியடைந்த ஐக்கிய மக்கள் சக்தி, வெற்றியடைந்த எமது கட்சிக்குச் சவால் விடுவது சிறுபிள்ளைத்தனமனது.

தேர்தலுக்கு முன்னர் வீரவசனம் பேசுபவர்கள் தேர்தல் நிறைவடைந்த பின்னர் அமைதியாகி விடுவார்கள். தேர்தல் தோல்வியே அவர்களின் மௌனத் துக்குக் காரணமாக அமையும். ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இதற்கு உதாரணங்களாக உள்ளன.

எதிர்க்கட்சிகள் மேடைகளில் ஏறி என்னதான் வீறாப்புப் பேசினாலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றியைத் தடுக்க முடியாது." - என்றார்.

## நரியின் முன் மண்டியிடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியாக மாறுவதற்கு அஞ்சி, உறவினர்கள் மற்றும் நண்பர்களின் ஊடகவலையமைப்புக்களைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றார். இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியமைப்பதை எவராலும் தடுக்க முடியாது.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துள்ளது. இவ்வாறான நிலையிலும் கூட மக்களுக்கு வழங்கப்படும் இலவச மருந்துகளில் மோசடிகள் இடம்பெறுகின்றன. முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்த அனைவரும் இதற்குப் பொறுப்பு கூற வேண்டும்.

நாட்டில் நீதி, நியாயம் மற்றும் உண்மையின் வெற்றிக்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னிற்கும். துப்பாக்கி ஏந்திய நரியின் முன் மண்டியிடும் நபர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை. வருமானத்தை ஈட்டுவதற்குச் சரியான தொலைநோக்குப் பார்வையும் வேலைத் திட்டமும் இருக்க வேண்டும்.

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு இந்த வேலைத்திட்டத்தை எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்பதை ஐக்கிய மக்கள் சக்தி நிரூபித்துள்ளது. நாட்டை வங்குரோத்தாக்கியவர்கள் யார் என்பதை நாம் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளோம். எனவே, அதற்கு காரணமானவர்கள் மீது பாதிக்கப்பட்ட மக்கள் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து, இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்." - என்றார்.



# திருமுறிகண்டியில் தெய்வீகக் கிராம நிகழ்வு














**(ந.லோகதயாளன்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் திருமுறிகண்டியில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையின் ஏற்பாட்டில் தெய்வீகக் கிராம நிகழ்வு நேற்றைய தினம் இடம் பெற்றது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலய வழிபாடு மற்றும் கோமாதா பூசையுடன் இந்நிகழ்வு ஆரம்பமாகி, திருமுறிகண்டி இந்து வித்தியாலய மண்டபத்தில் திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கடவுள் வாழ்த்து, கலை நிகழ்ச்சிகள் மற்றும் அதிதிகளின் உரைகளும் அங்கு இடம் பெற்றன. திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய அறநெறிப்பாடசாலையில் புதிதாக இணைந்த மாணவர்கள் உட்பட சுமார் 100 மாணவர்களிற்கு "தெய்வீக அன்புச் சிறுவர்கள்" திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன், திருமுறிகண்டி இந்து வித்தியாலய அதிபர் பேரின்பநாதன், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மோகனராசா உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

## லிட்ரோ எரிவாயு விலை இன்று முதல் உயரலாம்




லிட்ரோ எரிவாயுவின் விலை இன்று முதல் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ எரிவாயு விலை சூத்திரத்தின் படி, உள்நாட்டு எரிவாயு விலை திருத்தம் ஒவ்வொரு மாதமும் 4ஆம் திகதி நள்ளிரவில் இடம்பெறும்.

ஆனால் இம்முறை எரிவாயு விலை திருத்தம் இன்று முதல் அமுல்படுத்தப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வற் வரி இன்று முதல் அமுலுக்கு வரவுள்ளதால் இந்த முடிவை எடுக்க வேண்டியுள்ளதாகவும், புதிய விலைகள் இன்று அறிவிக்கப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள போதிலும், பண்டிகைக் காலம் காரணமாக கடந்த மாதம் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கரையோர ரயில் மார்க்க அட்டவணையில் திருத்தம்

ශ්‍රී ලංකා දුම්රිය දෙපාර්තමේන්තුව
Sri Lanka Railway Department

கரையோர ரயில் மார்க்கத்தின் பயண அட்டவணையில் இன்று முதல் அமுலாகும் வகையில் திருத்தம் மேற்கொள்வதற்கு ரயில்வேத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, மாத்தறை ரயில் நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் ருஹுணு குமாரி கடுகதி ரயில், இன்று முதல் பெலியத்த ரயில் நிலையத்தில் இருந்து பயணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், வார நாள்களில் மட்டும் இயக்கப்பட்ட சாகரிகா கடுகதி ரயிலை சனிக் கிழமைகளிலும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், வார நாள்களில் இரவு 8.35 மணிக்கு மருதானையில் இருந்து தெற்கு பயாகலை வரை முன்னெடுக்கப்படும் ரயில் சேவை இன்று முதல் அளுத்கம வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, மருதானையில் இருந்து அளுத்கம வரை பிற்பகல் 2 மணிக்கு இயக்கப்படும் ரயில் இன்று முதல் பிற்பகல் 1.55 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் என ரயில்வேத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நெருக்கடிக்கு மத்தியிலும் வாய்ப்பு

பழையன கழிதலும் புதியன புகுதலும் மாற்ற முடியாத இயற்கையின் நியதி.

அந்த வகையில் தோல்வி ஆண்டாக 2023 கழிய, 2024 பிறந்துள்ளது.

மக்களை - குறிப்பாக இலங்கை மக்களை - பொறுத்தவரை, முடிந்து போனது தோல்வி ஆண்டு. பிறந்திருக்கும் 2024 ஆம் ஆண்டு கூட நம்பிக்கை தருவதாக வரவில்லை. மக்கள் மத்தியில் அச்சத்தையும் அவநம்பிக்கையும்தான் அது தந்து நிற்கின்றமை கண்கூடு.

பொருளாதார நெருக்கடியில் சிக்கி நிக்கும் இலங்கைத் தேசத்திற்கு அதிலிருந்து மீளுவதற்கான நம்பிக்கையை - உறுதியை - பிறந்துள்ள புத்தாண்டு தரவே இல்லை. மாறாக, வரி உயர்வு, விலையேற்றம், சேவை கட்டணங்களின் அதிகரிப்பு, பொருளாதாரக் கெடுபிடிகள் என்று சாதாரண இலங்கைப் பொதுமகனின் வாழ்வியலையே ஆபத்துக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் தள்ளும் சாத்தியங்களே பிறந்த புத்தாண்டில் அச்சப்பட வைப்பனவாக - மலைக்க வைப்பனவாக - உள்ளன.

பொருளாதார நெருக்கடி தத்தமது பொக்கற்றுகளைக் கடிக்கப் போகின்றது என்ற உண்மை புரிந்த குடும்பத் தலைவர்கள், அதிலிருந்து மீளும் வழி தெரியாமல் தடுமாறிப் போய் நிற்கின்றார்கள்.

இந்த ஆண்டு முழுவதும் தம்மைச் சூறையாடப் போகின்ற நாட்டின் பொருளாதாரத்தின் போக்குக் குறித்து தடுமாறி நிற்கும் குடும்பங்களுக்கு, நாட்டின் நிலைமை எவ்வளவு கஷ்டமாக இருக்கப் போகின்றது என்ற புரிதலும் இல்லாமல் இல்லை.

ஆடம்பரச் செலவுகளை இயன்ற வரையில் குறைத்து, கட்டுமட்டாக எப்படி குடும்பங்களை வழிநடத்துவது என்ற முனைப்பில்தான் ஒவ்வொரு குடும்பத் தலைவனும் குடும்பத்தவர்களும் இருக்கின்றார்கள் என்பது உண்மை தான்.

இத்தகைய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இது தேர்தல் ஆண்டாகவும் பிறக்கின்றமை கவனிக்கப்பட வேண்டும்.

அரசமைப்பு ஏற்பாடுகள் மற்றும் சட்ட விதிகளின்படி அடுத்த ஜனாதிபதி தேர்தல் இவ்வாண்டில் செப்டம்பர் 18ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 18-ஆம் திகதிக்கும் இடையிலான ஒரு திகதியில் நடத்தி முடிக்கப்பட வேண்டும். அப்படிப் பார்த்தால் இன்னும் பத்து மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் தவிர்க்க முடியாத கட்டாயமாக வந்தமையும்.

அதேசமயம் அதைத் தொடர்ந்து அல்லது அதற்கு சற்று முன்பின்னாகப் பொது தேர்தலும் நடக்கும் சாத்தியங்கள் வலிமையாக உள்ளன.

பிறந்த ஆண்டில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகும் மக்கள், அதிலிருந்து மீளுவதற்கு சாதகமான ஒரு சங்கதியாக இந்தத் தேர்தல்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தவறான தலைவர்களை நாடும் மக்களும் சேர்ந்து நாட்டை வழிநடத்தும் பொறுப்புக்கு அவ்வப்போது தேர்ந்தமைதான் இந்த இழிநிலைக்கு நாட்டையும் மக்களையும் கொண்டு வந்திருக்கின்றது என்பது அப்பட்டமான உண்மை.

அத்தெரிவுகளில் மக்கள் இழைத்த தவறே அவர்களுக்கு இப்போது 'பூமராங்'காக திரும்பி வந்து இருக்கின்றது.

ஆட்சித் தலைவர்களை மக்கள் சரியாக - தெளிவான மற்றும் உறுதியான - பார்வையோடு தேர்வு செய்திருப்பார்களாயின் நாடு இந்த இழிநிலைக்கு வந்திருக்காது என்பது உறுதி.

ஆகவே பிறந்த புத்தாண்டில் அவலத்தை - கஷ்டங்களை - தொல்லைகளை - எதிர்கொள்ளப் போகும் மக்களுக்கு அவற்றின் பிடியிலிருந்து மக்களையும் நாட்டையும் மீட்கக் கூடிய தலைவர்களைத் தெரிவுசெய்யும் வாய்ப்புக் கூட இவ்வருடத்தில் கிடைக்கப் போகின்றது.

ஆகவே கஷ்டத்தை - தொல்லைகளை - தரும் 2024 ஆம் ஆண்டு, அதிலிருந்து நாட்டையும் மக்களையும் மீட்க - விலக்க - செய்வதற்கான ஒரு வாய்ப்பையும் தந்திருப்பது கண்கூடு.

அதை சரியாகப் பயன்படுத்த நாட்டு மக்கள் தவறக்கூடாது.

# குப்பிளானில் உள்ள களஞ்சியத்தில் பழுதடைந்த விதை உருளைக்கிழங்குகளைப் புதைக்க முடிவு!




யாழ்ப்பாணம் – குப்பிளானில் உள்ள களஞ்சியசாலையில் பழுதடைந்த உருளைகிழங்கு விதைகளை பாதுகாப்பாக அகற்றி, விவசாய நிலங்கள் மற்றும் குடிதண்ணீரைப் பாதிக்காத வகையில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாய திணைக்களத்தின் கண்காணிப்பில் மூன்று அடி ஆழத்திற்கு கீழே பாதுகாப்பு முறைமைகளை கையாண்டு பழுதான உருளைக் கிழங்கு விதைகள் சில தினங்களுக்குள் புதைக்கப்படவுள்ளன.

இது தொடர்பிலான கலந்துரையாடல் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள் விவசாயிகளுக்கும் இடையே நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

அந்தக் கலந்துரையாடலில் உருளைக்கிழங்கு விதைகளை விவசாய நிலங்களில் புதைத்து மண்ணையும் நிலத்தடி நீரையும் மாசுபடுத்த வேண்டாம் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

ஆனபோதும் உருளைக்கிழங்கு விதைகளை பொலீத்தினில் பொதி செய்து பாதுகாப்பாக களஞ்சிய சாலையில் இருந்து அகற்றி பாவனையற்ற வெளியான பகுதிகளில் புதைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதனடிப்படையில் பழுதான உருளைக்கிழங்கு விதைகளை பாதிப்பில்லாத வகையில் புதைப்பதற்கு ஏற்ற இடத்தை இனங்காண ஆராயப்பட்ட போதும் எங்கே புதைப்பது என்பது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

உலக வங்கியின் நவீன விவசாய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மானிய அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு கிடைத்த 21 மெட்ரிக் தொன் உருளைக் கிழங்கு விதைகள் குப்பிளானில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த விதை உருளைக்கிழங்குகள் பெக்டோ பெக்டீரியம் கெரெட்டோபோரம் எனப்படும் பக்டீரியா தாக்கத்திற்குள்ளாமையினால் பழுதடைந்திருந்தமை தொடர்பில் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி கண்டறியப்பட்டது.

இந்த பக்டீரியா தாக்கத்தினால் 21 மெட்ரிக் தொன் விதை உருளைக் கிழங்குகளையும் பயன்படுத்த முடியாத நிர்ப்பந்தம் தற்போது ஏற்பட்டுள்ளது.



# ‘யுக்திய’ சுற்றிவளைப்பில் இதுவரை 20,000 இற்கும் மேற்பட்டோர் கைது

கடந்த இர்ய் வாரங்களாக முன்னெடுக்கப்படும் யுக்திய சுற்றிவளைப்பில் 20 ஆயிரத்து 797 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



இவர்களில் 1,018 பேர் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், 189 பேருக்கு எதிராக சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றும் விசேட பணியகத்தின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த 4,584 சந்தேகநபர்களில் 1,625 பேர் யுக்திய சுற்றிவளைப்புகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையின் போது இதுவரைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் மொத்த சந்தைப் பெறுமதி 858 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமாகும்.

# 6ஆம் திகதி முதல் தைப்பொங்கல் வரை திருகோணமலையில் தமிழர்களின் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் கலாசார விழா!

## ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலில் ஏற்பாடு

(எஸ்.கீதபொன்கலன்)

தமிழர்களின் பாரம்பரிய கலை, கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையிலான மாபெரும் “கலாச்சார விழா“ எதிர்வரும் ஜனவரி மாதம் 6ஆம் திகதி முதல் தைப்பொங்கல் வரை கிழக்கு மாகாணத்தின் தலைநகரான திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலில் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகம், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து இக்கலாசார நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.

மூகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 1,500 மாணவர்களின் நடன நிகழ்வு

- 500இற்கும் மேற்பட்ட மாணவர்களின் கைவண்ணத்திலான கோலப் போட்டி
- ஆண் - பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி
- ஆண் - பெண் இருபாலாருக்குமான சிலம்பம் போட்டி
- படகோட்டப் போட்டி
- மாட்டு வண்டிச் சவாரி
- ஏறு தழுவுதல்
- 1008 பானைகளில் பொங்கல்
- பாரம்பரிய கலாசார நிகழ்வுகள்

- எனப் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது தமிழ் மக்களின் கலை, கலாசார விழுமியங்களை வெளிப்படுத்துகின்ற கலாசார விழாவாக ஒழுங்கு படுத்தப்பட்டு அதில் பொங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளதே தவிர இது தைப்பொங்கல் விழா இல்லை என ஏற்பாட்டாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடிப்பதற்கான முயற்சியுமாக இது ஏற்பாடாகி வருகின்றது.

அதுமட்டுமல்லாமல் திருகோணமலையில் முதன் முதலாக இடம்பெறுகின்ற தமிழ் மக்களின் பாரம்பரிய கலை, கலாசாரத்தை வெளிப்படுத்துகின்ற விழாவாக இது இருக்கின்றது. அத்துடன் இது ஒரு வரலாற்று நிகழ்வாகவும் பார்க்கப்படுகின்றது.



# 2024 இற்கான வாக்காளர் பட்டியல் பதிவு நடவடிக்கை இன்றே ஆரம்பம்




2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலுக்கான பதிவு நடவடிக்கைகள் இன்றே ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் பதிவு நடவடிக்கைகளை பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்க முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதால் அது தொடர்பான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் விரைவில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

# இந்தியாவின் சாதனைகள் அனைத்தும் அடுத்த ஆண்டிலும் தொடர வேண்டும்

## - பிரதமர் மோடி தெரிவிப்பு



"இந்தியா தன்னம்பிக்கையால் நிரம்பி வழிகிறது. இந்தியாவின் சாதனைகள் அடுத்த ஆண்டிலும் தொடர வேண்டும்."

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாதம்தோறும் இறுதி ஞாயிற்றுக் கிழமைகளில் மனதின் குரல் எனும் வானொலி நிகழ்ச்சி மூலம் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்காக உரையாற்றி வருகிறார்.

இந்த வகையில், நேற்று 108 ஆவது மாதத்தின் உரையை அவர் நிகழ்த்தினார். இதன்போது அவர் தெரி விக்கையில்,

"தற்போது இந்தியா தன்னம்பிக் கையால் நிரம்பி வழிகிறது. வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக் குவதற்கான எழுச்சி இது. 2024 ஆம் ஆண்டிலும் இதே உணர்வை, வேகத்தை நாம் பராமரிக்க வேண்டும். சந்திரயான்-3 இந்த வெற்றிக்காக இன்றும்கூட பலர் எனக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்புகிறார்கள். நமது விஞ்ஞானிகள் குறித்து, குறிப்பாக நமது பெண் விஞ்ஞானிகள் குறித்து நான் பெருமை கொள்கிறேன். என்னைப் போலவே நீங்களும் பெருமை கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இந்த ஆண்டு நமது விளையாட்டு வீரர்கள் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தினார்கள்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் 107 பதக்கங்களையும், ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியில் 111 பதக் கங்களையும் அவர்கள் வென்றுள்ளனர். உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் தங்களின் செயல்பாடு மூலம் நமது வீரர்கள் நாட்டு மக்களின் மனங்களை வென்றனர். அடுத்ததாக, 2024 இல் பாரிஸ் ஒலிக்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன. அதற்காக, ஒட்டுமொத்த தேசமும் விளையாட்டு வீரர்களை ஊக் குவிக்கிறது.

புதுமை கண்டுபிடிப்புகளின் மையாக இந்தியா மாறும் வரை அது தனது ஓட்டத்தை நிறுத்தாது. 2015 இல் சர்வதேச புதுமை கண்டுபிடிப்புகளுக்கான பட்டியலில் இந்தியா 81 ஆவது இடத்தில் இருந்தது. இன்று நாம் 40 ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறோம்.

இந்தியாவின் முயற்சி காரண மாக 2023 ஆம் ஆண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டாக அறிவிக்கப்பட்டது." என்றார்.

# ராஜஸ்தான் அமைச்சரவை விரிவாக்கம்: 22 எம்.எல்.ஏக்களுக்கு அமைச்சு பதவி




ராஜஸ்தான் அமைச்சரவை விரிவாக் கம் செய்யப்பட்டுள்ளது. இதில் 22 எம். எல்.ஏக்கள் அமைச்சர்களாக பொறுப் பேற்றுள்ளனர்.

ராஜஸ்தான் சட்டப் பேரவை தேர்தல் முடிவுகள் கடந்த 3 ஆம் திகதி வெளி யாகின. இதில் 199 தொகுதிகளில் 115 இடங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. புதிய முதல்வராக பஜன் லால் சர்மாவும், துணை முதல்வர்களாக தியா குமாரி மற்றும் பிரேம் சந்த் பைரவா ஆகியோர் கடந்த 15 ஆம் திகதி பதவியேற்றனர்.

ஏனைய அமைச்சர்களை தேர்வு செய்வதில் நீண்ட காலதாமதம் ஏற் பட்டது. இதனால் ராஜஸ்தான் அரசின் செயல்பாடுகள் ஸ்தம்பித்துள்ளன என முன்னாள் முதல்வர் அசோக் கெலாட் கூறினார்.

இதையடுத்து புதிய அமைச்சர்கள் மற்றும் அவர்களின் இலாகா விவரம் குறித்து முதல்வர் பஜன் லால் சர்மா டெல்லி சென்று பா.ஜ.க. மேலிட தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த நிலையில் ராஜஸ்தான் அமைச்சரவை விரிவாக்கம் நிகழ்ச்சி ஜெய்ப்பூரில்உள்ள ராஜ் பவனில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர், கிரோடி லால் மீனா, கஜேந்திர சிங் கின்வ்சர் ஆகியோர் உட்பட 22 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றனர்.

# இந்தியாவில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 பேர் பலி: பலர் காயம்

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத் தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 6 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மகாராஷ்டிராவில் கையுறை தயாரிக் கும் தொழிற்சாலையில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்திற்கான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில், சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# புத்தாண்டை முதலில் வரவேற்றது நியூசிலாந்து









உலகின் முதல் நாடாக நியூசிலாந்து 2024 புத்தாண்டை வரவேற்றது.

அந்த நாட்டின் கிரிபாட்டி உள்ளிட்ட பசுபிக் வலய தீவுகளில் இலங்கை நேரப்படி, பிற்பகல் 3.30 மணிக்கு 2024 ஆங்கில புத்தாண்டு பிறந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அந்தவகையிலே, நியூசிலாந்தில் புத்தாண்டு பிறந்ததையொட்டி அந்த நாட்டில் கண்கவர் வாண வேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உலகின் கிழக்கு திசையின் இறுதிப் பகுதியில் அவுஸ்ரேலியா, ஓசியானா கண்டத்தில் பசிபிக் பெருங்கடல் பகுதியில் நியூசிலாந்து நாடு அமைந்துள்ளது.

இதனால், உலகில் முதலாவதாக சூரியன் உதிக்கும் நாடாகவும் நியூசிலாந்து விளங்குகின்றது.

இதற்கு அடுத்தபடியாக அவுஸ்ரேலியாவில் புத்தாண்டு பிறந்துள்ளதோடு அங்குள்ள மக்கள் அதனை கோலாகலமாக கொண்டாடினர்.

# இஸ்ரேல் மீது இனப்படுகொலை குற்றச்சாட்டு: சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா வழக்கு



இஸ்ரேல் மீது இனப்படுகொலை குற்றச்சாட்டை தென்னாபிரிக்கா சுமத்தியுள்ளது.

இஸ்ரேல் இனப்படுகொலை குற்றத்தை செய்து வருவதாக தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளது. காஸாவில் பாலஸ்தீன மக்களை இஸ்ரேல் இனப்படுகொலை செய்து வருவதாக அக்குற்றச்சாட்டில் தென்னா பிரிக்கா தெரிவித்துள்ளது.

காஸாவில் இஸ்ரேல் பல போர் குற்றங்களைச் செய்வதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டி வந்த நிலையில், தென்னாபிரிக்கா இந்த வழக்கை தொடர்ந்துள்ளது.

பொதுமக்களை பாதுகாக்குமாறு பல நாடுகளும் வலியுறுத்திய போதும், காஸாவில் இதுவரை 21 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மக்களை இஸ்ரேல் கொன்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சீனா பங்குச் சந்தையில் பாரிய பின்னடைவு

2023 ஆம் ஆண்டு சீனா பங்குச் சந்தையில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பா உள்ளிட்ட உலகெங்கிலும் உள்ள பங்குச் சந்தைகளில் இந்த ஆண்டு பெரும் ஏற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் சீனாவில் ரியல் எஸ்டேட் நெருக்கடி மற்றும் மக்களின் செலவினங்கள் குறைவு வேலையின்மை போன்றவற்றினாலேயே சீனா இவ்வாறான பின்னடைவை சந்தித்துள்ளது.

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்



## மலர்ந்துள்ள புதிய ஆண்டு இனியதாய் அமைய வேண்டும்

### யாழ். ஆயரின் புத்தாண்டு வழ்த்துச் செய்தி

2024ஆவது புதிய ஆண்டு மலர்ந்துள்ள வேளை உலகம் முழுவதிலும் இந்தப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இந்தப் புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

2023 ஆவது ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்றுவிட்டது. கடந்த ஆண்டின் அந்த இன்ப அனுபவங்களுக்கு மட்டுமல்ல துன்ப அனுபவங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்வோம்.

மலர்ந்துள்ள புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனங்களிலும் நிறையவே உள்ளன.

மலர்ந்துள்ள புதிய 2024 ஆம் ஆண்டை இறைவேண்டுதல் ஆண்டாக உலகம் முழுவதிலும் கடைப்பிடித்து இறை வேண்டுதலில் முழுமையாக ஈடுபடும்படி திருத்தந்தை பிரான்சீஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

செபம் என்பது ஒரு பலமான ஆயுதமாகும். செபம் என்ற ஆயுதத்தால் அனைத்தையும் அடைய முடியும். அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். உலகில் முடியாதது எனக் கருதப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் முடிவுகாண முடியும்.

கடந்த ஆண்டின் பல கடின அனுபவங்களின் தாக்கம் இன்னும் எம்மை விட்டு முழுமையாக அகலவில்லை. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப் போகிறது என்ற பயம் முடிவில்லாத பயமாகவே உள்ளது. இறை வேண்டுதல் வழியேதான் இதுபோன்ற எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.

இறை வேண்டுதல் ஆண்டான 2024 ஆம் ஆண்டு முழுவதும் செபத்தில் நம்பிக்கை வைத்து இறை வேண்டுதலில் ஈடுபடும்படி அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

இறைவனின் அன்னையும் இறை மக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்த வேண்டி இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட்
ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ். ஆயர்.

# 'புதுவருடம் - 2024' சிறப்பிதழ்



## மண்ணில் நல்லவையே நடக்க வேண்டும்; மக்களுக்குப் பூரண சுதந்திரம் வேண்டும்!

### செஞ்சொற் செல்வரின் புத்தாண்டுச் செய்தி!

அன்பர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான புத்தாண்டு வாழ்த்துக்கள். காலம் வேகமாகக் கடக்கிறது. மனிதர்களாகிய நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு இறைவன் பல வழிகளைத் தந்துள்ளான். மனித வாழ்வில் நாம் சாதிக்கக் கூடியவை ஏராளம். நல்ல விடயங்களைச் சாதித்த மனிதர்கள் நமக்கு உதாரணமாக விளங்குகிறார்கள். எனவே நாம் முயற்சியுடையவர்களாகத் திகழ வேண்டும்.

2023 விடைபெற்றுவிட்டது 2024 இன்று பிறந்துவிட்டது. புதிய ஆண்டில் நல்ல விடயங்களைச் செய்வதற்கு நாம் திட்டமிடுவோம். எமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் இயன்ற முயற்சியை மேற்கொள்வோம். காலம் பெறுமதியானது. காலத்தை வீணாக் காதீர்கள் சென்ற நாள் திரும்பி வராது. பழையவற்றை எண்ணிக் கலங்காது புதியவற்றை சாதிப்பதற்கு ஆயத்த மாவோம்.

எம் மண்ணில் நல்லவையே நடக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம். அறம் செய்யாத ஆட்சி நிலைப்பதில்லை. எவர் ஆட்சியில் இருந்தாலும் தர்மத்தின் அடிப்படையில் மக்களை நேசிக்கவேண்டும். உண்மையான சத்திய ஆட்சி உருவாக வேண்டும். எல்லா மக்களுக்கும் பூரண சுதந்திரம் கிட்ட வேண்டும். தேவையற்ற ஆடம்பரங்களை எம் மக்கள் தவிர்க்க வேண்டும். இளைய தலை முறையை நல்வழிப்படுத்துவதற்கு அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வோர் முன்னுதாரணமாகச் செயற்பட வேண்டும்.

எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இனிய வழியில் வாழ முற்படுவோம். புதிய ஆண்டில் புது மனிதர்களாக எம் பணி தொடர்வோம்.

கலாநிதி ஆறு.திருமுருகன்,
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை,
உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்



## இன்று மலர்ந்துள்ள புத்தாண்டுதனில் அனைவர் வாழ்விலும் ஒளி பிறக்கட்டும்!

மலர்ந்துள்ள 2024 ஆம் ஆண்டு புதுவருடம் நம் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சியையும் அன்பையும் அள்ளித் தரும் ஆண்டாக அமையட்டும்.

சென்ற ஆண்டில் பொருளாதார நெருக்கடி, இஸ்ரேல் – காசா யுத்தம், இயற்கை பேரிடர்களால் துன்பப்பட்டு துயரமான ஆண்டாக அமைந்துள்ளது.

மக்கள் அனைவரும் பழையவற்றை மறந்து புத்தாடை அணிந்து ஆலயத்துக்குச் சென்று இறைவனை வணங்கிப் பட்டாசுகள் கொளுத்தி இனிப்புப் பலகாரங்கள் உண்டு தான தர்மங்கள் செய்து மங்கலமாய் புத்தாண்டை வரவேற்போம்.

மலர்ந்துள்ள புத்தாண்டுதனில் அனைவர் வாழ்விலும் ஞானஒளி பிறக்கட்டும், இருள் விலகட்டும், அருள் கிடைக்கட்டும், பொருள் பெருகட்டும், புகழ் பரவட்டும், நலம் வளரட்டும், புது வசந்தம் மலரட்டும், இன மத வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் அடியேனின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

துன்பங்கள் நீங்கி இன்பங்கள் சேரும் ஆண்டாய் அமைய அன்னை ஸ்ரீமுத்துமாரி அம்மன் திருவடிகள் தொழுது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் கூறி அமைகின்றோம்.

“இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க”
வாழ்க வளமுடம்!
சுபம்!!
மங்களம்!!!

சிவஸ்ரீ சோமசுந்தர தண்டபாணிக தேசிகர் (ஜே.பி.)
பிரதமகுரு, வல்வை. ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.
ஆதீனகர்த்தா, தென்புலோலி,
புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்.
பீடாதிபதி, அகில உலக சைவகுருமார் பேரவை.

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்



# அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள்

## புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

பல சவால்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் மத்தியிலேயே நாம் 2024 புது வருடத்தை ஆரம்பிக்கிறோம். ஆயிரக்கணக்கிலான எண்ணங்களைப் பூர்த்தி செய்துகொள்ள, நம் நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த காலங்களில் நீங்கள் செய்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் துயரங்களைத் தாங்கிக் கொண்டதன் பலனாக நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பை உருவாக்க எம்மால் முடிந்துள்ளது.

இருப்பினும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்காக, அதேபாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டியது அவசியமாகும். அது மலர் பாதையாக இல்லாமல், முட்களும், கற்களும் நிறைந்த பாதையாகவே அமைந்திருக்கும்.

இதனால், இலங்கை மீளக் கட்டியெழுப்பும் போது எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டியது இலங்கையராகிய எமது பொறுப்பாகும்.

ஜனவரி மாதத்திற்கு ஜேனஸ் எனும் கடவுளின் பெயர் சூட்டப்பட்டது. அக்கடவுளினால் முன்னோக்கி மாத்திரம் அன்றி, பின்னோக்கியும் பார்க்க முடியுமாம்.!

அதனால் எதிர்காலம் தொடர்பில் மட்டுமன்றி, கடந்த காலம் தொடர்பிலும் அறிந்து, ஒவ்வொருவரினதும் சவால்களைப் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எமது பொறுப்புக்களை அறிந்து கொள்வோம். அவற்றை செயற்படுத்தி, தாய் நாட்டை பலப்படுத்துவோம். அதற்காக பொறுப்புடனும் அர்பணிப்புடனும் செயற்படுவோம். அதனால் புத்தாண்டை செழிப்பானதாக மாற்றிக் கொள்வோம். பிறந்திருக்கும் இந்த ஆண்டு, அனைவருக்கும் வெற்றிகரமான ஆண்டாக அமைய வாழ்த்துகள்.

ரணில் விக்ரமசிங்க,
ஜனாதிபதி,
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு.

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்



# மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சியாளர் நாட்டுக்குத் தேவை!

## புத்தாண்டுச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

வெற்றிகளை விட எண்ணற்ற தோல்விகளை உள்ளடக்கிய ஒரு வருடம் முடிந்து புதிய வருடம் உதயமாகியுள்ளது.

2023 ஆம் ஆண்டு நம் மனதில் மகிழ்ச்சியைக் கொண்டுவரக் கூடியவாறு எதுவும் கிடைக்காத ஆண்டு, இந்த ஆண்டில் மக்கள் வெற்றியின் சாயல் கூட காணவில்லை.

முறையாக மக்கள் ஆணையைப் பெற்ற அரசை உருவாக்கினால் அன்றி தற்போதைய குழப்பமான மற்றும் நம்பிக்கையற்ற இருள் சூழ்ந்த காலத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது.

எனவே, புதிய ஆண்டு புதிய தேர்தலுக்கு வழி வகுப்பதே முதன்மையான போராட்டமாக இருக்க வேண்டும். அப்படி இல்லை என்றால், 2024 ஆம் ஆண்டும் ராஜபக்ஷர்களை முன்னரையும் விடப் பாதுகாப்பாக ஆட்சியாளர் தொங்கு பாலத்தின் ஊடாகக் கரை சேர்க்கும் ஆண்டாக அமையலாம்.

நாடு பல பாரிய பொருளாதார மற்றும் அரசியல் இடர்களை எதிர்நோக்கி வரும் இந்தத் தருணத்தில், நாட்டு மக்கள் சாதாரண வாழ்க்கை நிலைமைகளில் கூட பல அசாதாரண சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளனர்.

விவசாயம் மற்றும் தொழில் முயற்சியாளர் சார்ந்த தன்னிறைவுப் பொருளாதார முறை தற்போதைய அரசின் தொலைநோக்கு அற்ற நடவடிக்கைகளால் முற்றிலும் தலைகீழாக மாறியுள்ளது.

இந்த நிலை மாற வேண்டுமானால், ஆட்சியாளர்களின் நன்மைகளைப் பற்றிச் சிந்திக்காமல் மக்களைப் பற்றிச் சிந்திக்கும் ஆட்சியாளர்களே – ஆட்சி முறையே நாட்டுக்குத் தேவை.

75 ஆண்டுகால ஜனநாயக வரலாற்றில் அதிகாரம் இல்லாமல் எந்த எதிர்க் கட்சியும் செய்யாத பொதுச் சேவையை நாட்டின் ஜனரஞ்சக எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கடந்த 3 ஆண்டுகளில் செய்துள்ளது.

இந்தச் சேவையை 2024 ஆம் ஆண்டிலும் தொடர்வதே எங்கள் நோக்கம். மேலும், மக்களை ஒடுக்கி, வரிக்கு வரி விதித்து, மக்களின் வாழ்வை அழிக்கும் வகையில் அரசு செயல்பட்டுள்ள இந்தத் தருணத்தில், நாம் மீண்டும் ஒரு நாடாக ஒன்றிணைய வேண்டும்.

இந்தப் புத்தாண்டு இலங்கையர்களான எமக்கு முக்கியமான ஆண்டாகும். நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பல தேர்தல்கள் நடைபெறவுள்ள ஆண்டாகும்.

எனவே, இதுவரையில் நாம் பெற்ற வெற்றிகளின் பலனை அமைதியான முறையில் அனுபவித்து, ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொண்டு எமது தேசிய அபிலாஷைகளை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இந்தப் புத்தாண்டிலாவது மக்கள் தங்கள் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

**சஜித் பிரேமதாச – எதிர்க்கட்சித் தலைவர்**

# 'புதுவருடம் – 2024' சிறப்பிதழ்



## 2024 ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அமையட்டும்

### வாழ்த்துச் செய்தியில் அங்கஜன் இராமநாதன்

புது விடியலுக்காக காத்திருக்கும் மக்களுக்கு நல்ல செய்தியைச் சொல்லும் ஆண்டாக புத்தாண்டு அமைய வேண்டும்.

கடந்த இரு வருடங்களும் நாட்டு மக்களுக்கு பல படிப்பினைகளை உணர்த்தி விட்டுச் சென்றுள்ளன.

அந்தவகையில் கொரோனா தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியன மக்களை அதிகம் வாட்டி வதைத்தன.

இந்த இரண்டு தாக்கங்களுமே ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இன்றி அனைவரையுமே வதைத்தன. இதுவே கடந்த இரண்டு வருடங்களும் எமக்கு உணர்த்தி விட்டுச் சென்ற பிரதான பாடங்கள்.

கடந்த வருடங்கள் எமக்கு உணர்த்திய பாடங்கள் புதிய வருடத்தில் வெற்றிகரமாக காலடி எடுத்து வைக்க உறுதுணையாக அமையும் என நம்புகிறேன்.

அந்தவகையில் நாம் அனைவருமே வேறுபாடுகளைக் கடந்து நாட்டினுடைய பொருளாதார, அரசியல், சமூக மற்றும் கலாசார ஸ்திரத்தன்மைக்காக ஒன்று பட்டு உழைக்க இந்தப் புதிய வருடத்தில் எம்மை அர்ப்பணிப்போம்.

2024 ஆம் ஆண்டு சகல விதத்திலும் நாட்டு மக்களுக்கு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும். பல எதிர்பார்ப்புக்களோடு புத்தாண்டை எதிர்நோக்கும் உலக மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மனமகிழ்வடைகிறேன்.

அங்கஜன் இராமநாதன்,
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்



## சம உரிமையையும் அந்தஸ்தையும் புத்தாண்டு மக்களுக்கு வழங்கட்டும்!

### மருதபாண்டி ரமேஸ்வரன் எம்.பி. புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு

பிறந்துள்ள புத்தாண்டு இலங்கை மக்களுக்குச் சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி, நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும்.

பஞ்சம், பசி, பட்டினி என்பவற்றுக்கு விடிவு தேடி புதிய வாழ்வின் ஏக்கங்களை கண்களில் சுமந்து இலங்கை வந்து குடியேறிய இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழ்வின் இருள் நீக்கி ஒளி பெற்ற ஒரு பெரும் சமுதாயமாக, வரலாற்று மாற்றத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நாட்டின் சகல முன்னேற்றத்துக்கும் இந்திய வம்சாவளி மக்கள் தமது பங்களிப்பைப் பெருமளவில் செலுத்தியிருக்கின்றார்கள். உழைக்கும் வர்க்கமாகிய தோட்ட தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெழும்பாக இருந்து வருகின்றார்கள்.


எந்தவொரு காலகட்டத்திலும் இந்த நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர இந்த நாட்டுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை.

இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம் பேசும் சக்திகளால்தான் பெற்றிருக்கின்றார்கள். எனவே இந்த புதிய வருடத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கும் அதேபோல் மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை அனைவரும் நிறைவேற்றுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம்.

நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலைநிறுத்தி நாம் தலை நிமிர்ந்து ஏனையோருக்கு நிகராக வீறுநடை போடவும் பிறக்கும் புத்தாண்டில் உறுதி கொள்வோம்.

**மருதபாண்டி ரமேஸ்வரன்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**நுவரெலியா மாவட்டம்.**
**தவிசாளர்,**
**இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.**

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்




## 1957 ஆம் ஆண்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் நாள்காட்டி...!

**- ஆர். நடராஜன் ஹரன் -**

21 ஆம் நூற்றாண்டின் 24 ஆவது வருடமாகவும் 04 ஆவது மிலேனியத்தின் 24 ஆவது ஆண்டாகவும் அமைந்துள்ள இந்த 2024 புதுவருடம் தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனையுடன் சாய் பாபாவின் சமித்திகளிலும் இந்து ஆலயங்களில் அதிகாலை பூஜை நிகழ்வுடன் வரவேற்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தம் புதிய ஆண்டு வான சாஸ்திர அறிஞர்கள் கூற்றுப்படி 4 ஆவது மிலேனியத்தின் 24 ஆவது ஆண்டு என்றும் இந்து நாள்காட்டியின் படி கலியுகம் 5125 - 5126 எனவும் பௌத்த ஆண்டு 2568 என்றும் இஸ்லாமிய நாள்காட்டியின் படி ஹிஜ்ரி 1445 எனவும் கொள்ளப்பட்டு அந்தந்த மத மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இருந்த போதிலும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய கிரேக்கரின் ஆங்கில வருடப் பிறப்பான ஜனவரி 01 ஆம் திகதியையே உலகத்தவர் அனைவரும் புத்தாண்டு வருடப் பிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இதனடிப்படையிலேயே உலக வர்த்தகங்கள், விஞ்ஜான மெஞ்ஜான கணக்குகள், வானசாஸ்திரங்கள் அமையப்பெற்றுள்ளன.

1957 ஆம் ஆண்டின் அடிப்படையிலேயே இந்த 2024 ஆம் ஆண்டின் நாள்காட்டி அமையப் பெற்றுள்ளதும் இதன் பலாபலன்களையே எதிர்பார்க்க படுவதும் குறிப்பிடத்தக்கது.

உலகில் வாழும் மக்கள் ஏதாவது ஒரு எல்லைக்குள் கட்டுப்பட்டு வாழ வேண்டியுள்ளது. அதற்காகவே காலக் கணக்கீடுகள் உருவாக்கப்பட்டன.

ஆண்டு, மாதக் கணக்குகள் ஏதேனும் ஒரு நாள்காட்டியின் அடிப்படையில் தான் கணிக்கப்படுகின்றன. ஆங்கில நாள்காட்டி என்றவுடன் நாம் அது ஆங்கில மொழி தோன்றிய இங்கிலாந்தின் நாள்காட்டி என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. கூறப்போனால், இது ஆங்கில நாள்காட்டி என்பதைவிட இதைச் சர்வதேச நாள்காட்டி என்றுதான் கூற வேண்டும். இது க்ரிகேரியன் நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக, தங்கள் நாட்டுக்கெனத் தனித் தனியே வெவ்வேறு நாள்காட்டிகளைக் கொண்ட நாடுகள் தங்களுக்கு இடையே தகவல் பரிமாற்றம் மற்றும் ஒப்பந்தங்கள் ஆகியவற்றுக்கு இந்த நாள்காட்டியையே பயன்படுத்துகின்றன.

இந்த க்ரிகேரியன் நாள்காட்டி வழக்கத்துக்கு வந்ததே 16 ஆம் நூற்றாண்டில்தான். இது கிருஸ்தவர்கள் (குறிப்பாகக் கத்தோலிகர்கள்) தங்கள் ஈஸ்டர் பண்டிகையைச் சரியாகக் கணிக்க வடிவமைக்கப்பட்டது. முதலில் வெவ்வேறு கத்தோலிகக் குழுக்களாலேயே நீண்ட சர்ச்சைக்குள்ளான இந்த நாள்காட்டி பின்னர் படிப்படியாகப் பெரும்பாலான நாடுகளால் ஏற்கப்பட்டது.

இது பெருமளவில் ரோம சாம்ராஜ்ஜியத்தின் ஜுலியன் நாள்காட்டியின் அடிப்படையிலேயே (சில வேறுபாடுகளுடன்) தயாரிக்கப்பட்டது. கி.மு. 222 ஆம் ஆண்டுக்கு முன் வரை புத்தாண்டு மே மாதம் முதல் திகதியில் கொண்டாடப்பட்டு வந்துள்ளது என்று கூறுகின்றனர். கி.மு. 222 ஆம் ஆண்டு முதல் கி.மு.153 ஆம் ஆண்டுவரை புத்தாண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. கி.மு.153 ஆம் ஆண்டு முதல் புத்தாண்டு ஜனவரி முதல் திகதியில் இருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. கி.மு.45 ஆம் ஆண்டு முதல் ஜுலியன் நாள்காட்டி அமுலுக்கு வந்த பின்னரும் பல்வேறு நாடுகளில் பல்வேறு அரசுகள் ஆண்டுத் துவக்கத்தை மாற்ற முயன்றும் (கணக்கு வழக்கு ஆண்டுகளை மாற்றிய போதும்) மக்களைப் பொறுத்தவரை பொது ஆண்டின் ஆரம்பம் ஜனவரி முதலாம் திகதியாகவே இருந்து வருகிறது.

இலங்கையரைப் பொறுத்தவரை ஜனவரி முதல் திகதியைக் கிருத்துவ ஆண்டின் ஆரம்பம் என்றும் கூறுவோம். ஆனால், 10-17 நூற்றாண்டுகள் வரை பல்வேறு (ஐரோப்பிய) நாடுகள் கிறிஸ்தவ மத ஆலயங்களின் ஈர்ப்பால் – தூண்டுதலால் தங்கள் நாடுகளில் ஆண்டுத் தொடக்கத்தை டிசெம்பர் 25, மார்ச் 25 (தேவ மாதா கருவுற்ற நாள்), ஈஸ்டர் ஆகிய நாள்களுக்கு மாற்ற முனைந்துள்ளனர். க்ரிகேரியன் நாள்காட்டிக்கு மாறியவுடன் பெரும்பாலான நாடுகள் ஜனவரி முதல் திகதியையே மீண்டும் ஆண்டுத் தொடக்கமாகக் கொண்டன.

ஜுலியன் நாள்காட்டிக்கும் க்ரிகேரியன் நாள்காட்டிக்கும் இடையில் ஒவ்வொரு நானூறு ஆண்டுகளுக்கும் மூன்று நாள்கள் வித்யாசம் உண்டு. க்ரிகேரியன் நாள்காட்டியில் 1700, 1800, 1900 ஆகிய ஆண்டுகள் லீப் வருடமாக இல்லாமல் சாதாரண ஆண்டாக (அதாவது,

தொடர்ச்சி▼

# ‘புதுவருடம் – 2024’ சிறப்பிதழ்

## 1957 ஆம் ஆண்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் நாள்காட்டி...!

தொடர்ச்சி▲

பெப்ரவரியில் 28 திகதிகளுடன் 365 நாள்கள் கொண்டு) இருக்கும். இதனால், கத்தோலிகத் திருச்சபையால் 16 ஆம் நூற்றாண்டில் (1582-இல்) ஜுலியன் நாள்காட்டியிலிருந்து 10 நாட்கள் நீக்கப்பட்டன. 1582 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 4 ஆம் திகதி (விழாயக் கிழமைக்கு) அடுத்த நாள் ஒக்ரோபர் 15 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) என்று குறிக்கப்பட்டு க்ரிகேரியன் நாள்காட்டிக்கு மாற்றப்பட்டது.

ஆனாலும் பெரும்பான்மையான ஐரோப்பிய நாடுகள் 17-18 ஆம் நூற்றாண்டில்தான் க்ரிகேரியன் நாள்காட்டிக்கும் மாற்றம் செய்து கொண்டன.

ஆங்கில மொழியின் தாய்நாடான இங்கிலாந்தில் 1752 ஆம் ஆண்டுதான் க்ரிகேரியன் நாள்காட்டிக்கு மாற்றம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது 11 நாள்கள் குறைக்கப்பட வேண்டியிருந்தது. ‘11 நாள்களைத் திருப்பிக் கொடு’ என்பது போன்ற போராட்டங்கள் ஏற்பட்ட மாற்றம் 1800இற்குத் தள்ளிப் போனது. (அப்பொழுது 12 நாள்கள் குறைக்க நேரிட்டது). பழைய நிதி ஆண்டின் ஆரம்பமாக மார்ச் 25 (பெருமாட்டி தினம்) இலிருந்து ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு நிதி ஆண்டு மாற்றப்பட்டது.

ரஷ்யாவின் க்ரிகேரியன் ஆண்டு 1917 இல் ஒக்ரோபர் புரட்சிக்குப் பின்னர் ஏற்கப்பட்டது. கூறப்போனால் அதை ஒக்ரோபர் புரட்சி என்பதே தவறு. ஏனெனில், புரட்சி நடந்தது ஜுலியன் வருடத்தின் ஒக்ரோபர் மாதம். ஆனால் க்ரிகேரியனில் அப்பொழுது நவம்பர் ஆரம்பம் ஆகிவிட்டது. 1918 இல் ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பின் பெப்ரவரி 14 ஆம் திகதியாக மாற்றப்பட்டது.

எப்படி இருந்தாலும் தற்போது பெரும்பாலான நாடுகளில் (மதச் சடங்குகளைத் தவிர்த்த விஷயங்களில்) இந்த க்ரிகேரியன் நாள்காட்டிகள் வழக்கத்துக்கு வந்துவிட்டபடியால் ஜனவரி முதல் திகதியே புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது.

காலக் கணக்கீடு

காலத்தைக் கணக்கிடும் முறைகள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகியதற்கு இந்தியாவின் பண்டைய இலக்கியமான வேதங்களில் சான்றுகள் உள்ளன. காலத்தை கல்பம், மன்வந்திரம், யுகம், ஆண்டு, அயனம், ருது, மாதம், வாரம், நாள், மணி, நாழிகை, விநாடி என்று பல கூறுகளாக நமது முன்னோர் வகுத்திருந்தனர்.

நாடு நெடுகிலும் இப்போதும் புழக்கத்தில் இருக்கும் பஞ்சாங்கத்தின் வயது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். பஞ்சாங்கமே நமது நாட்டில் நாள்காட்டியாக இருந்துள்ளது. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படாத காலத்திலேயே வாய்மொழி, மனன முறையில் பஞ்சாங்கத் தகவல்கள் தலைமுறை தலைமுறையாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

### ரோமன் நாள்காட்டி

ஆனால் உலக அளவில் நாள்காட்டி முறை முதன்முதலில் ரோமப் பேரரசில் உருவானதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அதைக் கடைபிடித்ததாலும், ஐரோப்பிய நாடுகளின் காலனி ஆதிக்கம் உலகம் முழுவதும் பரவியதாலும் இக்கருத்து உருவாகியிருக்க வேண்டும்.

ஆனால், ரோமப் பேரரசு காலத்தைய ரோமன் நாள்காட்டியின் ஆரம்பம் கி.மு. 700 மட்டுமே. அதற்குப் பின் ஜுலியஸ் சீஸரால் சீர்திருத்தப்பட்ட ஜுலியன் நாள்காட்டியின் ஆரம்ப ஆண்டு கி.மு. 45.

அதற்கு இணையான விக்கிரமாதித்திய சகாப்தம் (கி.மு. 57), சாலிவாகன சகாப்தம் (கி.பி. 78) போன்றவை இந்தியாவிலும் இருந்துள்ளன. இந்து வானவியலின்படி கலியுகம் ஆரம்பமாகி இதுவரை 5,116 ஆண்டுகள் (கி.மு. 3102) ஆகியுள்ளன என்று நமது பஞ்சாங்கங்கள் கூறுகின்றன.

### கிரிகோரியன் நாள்காட்டி

அந்தந்த நாட்டு மக்களின் நம்பிக்கை, மதம், பாரம்பரியம் ஆகியவற்றின் அடிப்படையில், உலக அளவில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் நாள்காட்டியை கடைபிடித்து வந்துள்ளன. இந்தியாவிலும் கூட பல்வேறு பிரதேசங்களில் பல வகையான ஆண்டு ஆரம்பங்கள் அனுசரிக்கப்படுகின்றன.

ஆனால் உலக அளவில் பொதுவான நாள்காட்டியின் தேவை உணரப்பட்டபோது உருவானதுதான் தற்போது நாம் பயன்படுத்தும் ஆங்கில நாள்காட்டி என்று அழைக்கப்படும் ‘கிரிகோரியன் நாள்காட்டி’. அதற்கு முன்னர் ஆண்டின் ஆரம்பம் மார்ச் 1, மார்ச் 25, ஈஸ்டர், செப்ரெம்பர் 1, செபரெம்பர் 25 எனப் பல வகையாக உலகத்தில் அனுசரிக்கப்பட்டுள்ளன. ஐரோப்பிய எழுச்சியின் போது, பக்கத்துப் பக்கத்து நாடுகளில் நிலவிய கால வேறுபாடுகளால் குழப்பம் ஏற்பட்டபோது, பொதுவான நாள்காட்டியின் தேவை உணரப்பட்டது.

1582 இல் கத்தோலிக்க மத குருவாக இருந்த போப் 13 ஆவது கிரிகோரியால் அறிமுகப்படுத்தப்பட்டதே தற்போது வழக்கத்தில் உள்ள நாள்காட்டி ஆகும். அவரது பெயரே புதிய நாள்காட்டிக்குச் சூட்டப்பட்டது.

இதனை வடிவமைத்தவர் ஜேர்மனியைச் சேர்ந்த ஜெசூட் பாதிரியாரான வானியல் மேதை கிறிஸ்டோபர் கிளாவியஸ். இதில் தான் ஜனவரி 1 முதல் ஆரம்பிக்கும் தற்போதைய நாள்காட்டி முறை அறிமுகமானது.

### எல்லா நாள்களும் நல்ல நாள்களே

தொடர்ச்சி▼

# ‘புதுவருடம் - 2024’ சிறப்பிதழ்

## 1957 ஆம் ஆண்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் நாள்காட்டி...!

தொடர்ச்சி▲

இவ்வாறு தான் நாம் பயன்படுத்தும் சர்வதேச நாள்காட்டி உருவானது. இதன் ஆரம்பமாக ஜனவரி 1 இருப்பதால், இந்த நாளைப் புத்தாண்டின் ஆரம்பமாக உலகம் கொண் டாடுகிறது.

இதுவரையிலான வாழ்வில் இருந்து புதிய வாழ்வுக்கு வாய்ப்பு உருவாவதாக ஓர் நம்பிக் கையை உருவகமாக ஏற்படுத்துகிறது புத் தாண்டு. எனவே தான் இந்த நாள் கொண் டாட்டத்துக்கு உரியதாகிறது.

ஆனால், கதிரவன் மறைந்து மீண்டும் உதிக்கும்போது உருவாகும் ஒவ்வொரு நாளும் நமக்கு புதிய நாளே. உண்மையில், நமது காலம் ஒவ்வொரு நாளும் கழிவதைக் குறிப்பிட்டு எச்சரிக்கிறது நாள்காட்டி. எனவே, வரும் நாள்களை மதிப்புள்ளதாக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

மது அருந்துவதும், நள்ளிரவு 12 மணிக்கு ஆரவார இரைச்சலுடன் அதிவேகமாக வாக னம் ஓட்டுவதும்தான் புத்தாண்டு என்ற மாயை சமீபகாலமாக நம்மிடையே பரவி வருகிறது. மறுநாள் விடியாமல் போகாதா என்று பட்டினி யால் ஏங்கும் பல கோடிப் பேர் வாழும் உல கில் இத்தகைய கொண்டாட்டங்களைப் போல பொருளற்ற செயல் வேறில்லை.

புத்தாண்டு என்பது கேளிக்கைகளில் ஈடுபடுவதற்கான தருணம் மட்டுமல்ல, நம்மை நாமே மறுவிசாரணை செய்து கொள்வதற்கான தருணமும் கூட.

2024 ஆம் ஆண்டேனும் நம்மை புதிய மனிதர்களாக்கட்டும். சேமிப்பை வாழ்க்கையின் அத்திவாரமாக்கி மீதியில் வீடுகட்டுங்கள் வாழ்வை வசந்தமாக்க திட்டமிடுங்கள். வெற்றி உங்கள் கையில்.

ஜனவரி முதல் டிசெம்பர்வரை உள்ள இந்த ஆங்கில ஆண்டு முறை கிறிஸ்தவ நாள்காட்டி அல்ல. மாறாக இயேசுவின் பிறப்புக்கு முன்னரே உள்ள நாள்காட்டி முறை ஆகும்.

இது பண்டைய ரோம, கிரேக்கர்களின் நாள்காட்டி முறையாகும். இந்த மாதங்களும், அதற்கான காரணங்களையும் நாம் ஆய்வு செய்தால் அது விளங்கி விடும்.

ஜனவரி : இது ‘ஜானஸ்’ என்ற ரோமக் கடவுளின் பெயர். இந்தப் பெயரை காலண்டரில் கி.மு. 700 ஆம் ஆண்டு ஜுலி-யஸ் ஸீஸர் மன்னர்தான் சேர்த்தார்.

பெப்ரவரி : இது லத்தீன் மொழி வார்த்தை. ரோமத் திருவிழா ‘பிப்ரேரியஸ்’ இன் நினைவாக வந்த மாதம்.

மார்ச் : இதுவும் லத்தீன் வார்த்தை. ரோமக் கடவுள் ‘மார்ஸ்’ இன் பெயராலே அழைக்கப் படுகிறது.

ஏப்ரல் : லத்தீன் மொழியில் ‘ஏப்ரலிஸ்’ என்பதுதான் ஏப்ரல் என்றாகி விட்டது. இதன் பொருள் ‘திறப்பது’ என்பது ஆகும்.

ஆரம்பத்தில் ஆண்டின் தொடக்கம் ஏப்ரல் மாதத்தில்தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ‘போப்பாண்டவர்’ தான் புத்தாண்டை ஏப்ர லிலிருந்து ஜனவரிக்கு மாற்றினார். இதனை ஒரு சாரார் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே ஜனவரி 1 ஆம் நாளைப் புத்தாண்டின் முதல் நாளாக ஏற்றுக் கொண்ட ஐரோப்பியர்கள் மற்ற ஐரோப்பியர்களைப் பார்த்து ஏப்ரல் 1 ஆம் நாள் ‘முட்டாள்களின் தினம்’ என்று அழைக்கத் தொடங்கினர். (ஆகா!! என்ன ஓர் அறிவுப்பூர்வமான வரலாறு?!!) சரி, விடுங்கள்! மேலே படியுங்கள்.

மே : ‘மேயஸ்’ என்ற கிரேக்கப் பெண் கடவுளின் பெயரால் இது அழைக்கப்படுகிறது.

ஜுன் :ரோம கடவுள் ‘ஜுனோ ’வின் பெயரால் இம்மாதம் அழைக்கப்படுகிறது.

ஜுலை : மன்னர் ‘ஜுலியஸ் ஸீஸர் ’ பெயரால் அழைக்கப்படுகிறது.

ஆகஸ்ட் : மன்னர் ‘அகஸ்டிஸ் ஸீஸர் ’ பெயரால் அழைக்கப்படுகிறது.

மீதமுள்ள செபரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய நான்கு மாதங்களும் 7,8 ,9,10 ஆகிய லத்தீன் எண்களின் பெயரி லிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகளாகும். ஆக மாதங்களின் பெயர்களில் பெரும்பாலானவை கடவுளின் பெயர்கள்தான்.

இது ஒரு புறமிருக்க இந்தக் காலண்டர் மாதங்களின் நாள்களின் முடிவு செய்ததிலும் ‘ஒரு முட்டாள் தனமான’ வரலாறு உள்ளது.

முதலில் மாதங்களின் நாள்கள் ஜனவரி முதல் டிசெம்பர் வரை 30 நாள்களும் 31 நாள்க-ளும் மாறி மாறி வந்தன. அதாவது ஜனவரி 31 நாள்கள், பெப்ரவரி 30 நாள்கள், மார்ச் 31...

இதனை ஜுலியஸ் ஸீஸர் ஏற்றுக் கொள்ள வில்லை. பெப்ரவரி மாதத்திலிருந்து ஒரு நாளைப் பிடுங்கி தன் பெயரில் உள்ள மாதத் துக்கு அதாவது ஜுலை மாதத்துக்குச் சேர்த்தார். அதனால் 30 நாளாக அதுவரை இருந்த ஜுலை மாதம் 31 நாளாக மாறியது. காலண்டர் மொத்தமும் மாற வேண்டியது வந்தது. ஓகஸ்ட் 30 நாளானது.

இப்படிக் கொஞ்ச காலம் போனது. பின்னர் அகஸ்டியஸ் ஸீஸரின் ஆதரவாளர்கள் ஓகஸ்ட் மாதமும் 31 நாளாக இருக்க வேண்டும் என்று கோரினர். மீண்டும் பெப்ரவரி மாதத்திலிருந்து ஒரு நாள் பிடுங்கி ஓகஸ்டில் சேர்க்கப்பட்டது. ஆக இத்தனைக் குழப்பத்துக்குப் பின்னர்தான் நாம் வைத்திருக்கும் இந்த நாள்காட்டி தயா ரிக்கப்பட்டது.

இது ‘கிரீகோரியன்’ (Gregorian) நாள் காட்டி என்று அழைக்கப்படும்.

இப்படி ‘முட்டாள்தனமான’ ஒரு வரலாற்றை

தொடர்ச்சி▼

# 'புதுவருடம் - 2024' சிறப்பிதழ்

## 1957 ஆம் ஆண்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டின் நாள்காட்டி...!

தொடர்ச்சி▲

மூடிமறைத்து நம்மைப் பின்பற்ற வைத்துள்ள மேற்கத்தியர்களை உண்மையில் 'அறிவாளிகள்' என்ற சொல்ல வேண்டும்.

ஆக இந்தக் நாள்காட்டிக்கும் இயேசுவுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஆனால் எப்பொழுது கிறிஸ்தவம் 'ரோமன் கத்தோலிக்கம்' என்று மாறியதோ, அந்த நாள் தொடங்கி கொள்கை முதல் கலாச்சாரம் வரை அனைத்திலும் ரோம கிரேக்க அநாகரிகம் (Paganism) ஊடுருவி விட்டது. கிறிஸ்தவர்களும் இதனைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

### தமிழ்ப் புத்தாண்டு வரலாறு ஆங்கில ஆண்டின் வரலாறு

புத்தாண்டு தொடர்பான விவாதங்கள் கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இவ்வாண்டின் தொடக்கத்தில் தமிழக முதல் 'தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு' என்று அரசாணை பிறப்பித்தார். அதன்பிறகு, காலங்காலமாக சித்திரையில் தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடிவரும் உலகமெங்கும் உள்ள தமிழ் மக்களிடையே பல்வேறு ஐயங்களும் குழப்பங்களும் சலசலப்புகளும் தோன்றின. சித்திரையை ஒதுக்கவும் முடியாமல் தைத்திங்களை ஏற்கவும் முடியாமல் தமிழ் மக்கள் இன்னும் திணறிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில், தமிழ்ப் புத்தாண்டு எது? ஏன்? எப்படி? ஆராய்வோம் வாரீர்.

மாந்த நாகரிகம் தொடங்கிய காலம் தொட்டு வெவ்வேறு இன மக்கள் வெவ்வேறு நாள்களைத் தங்கள் புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். இன்று சமய அடிப்படையில் கிறிஸ்தவர்கள் ஜனவரி முதல் நாளைப் புத்தாண்டின் ஆரம்பமாகக் கொண்டாடுகிறார்கள். இஸ்லாமியர்கள் முகமது நபி மக்காவில் இருந்து மதினாவுக்குப் புலம்பெயர்ந்த நாளில் இருந்தே ஆண்டுகளைக் கணக்கிடுகிறார்கள். இப்படியே புத்த சமயத்தவர் புத்தர் பிறந்த நாளில் இருந்து ஆண்டுகளை எண்ணுகிறார்கள்.

கிறித்தவர்களுக்கு ஜனவரி முதல் நாள் எப்போதும் புத்தாண்டின் தொடக்கமாக இருந்ததில்லை. பதினெட்டாம் நூற்றாண்டுவரை இயேசு பிறந்த டிசெம்பர் 25 ஆம் நாளைப் புத்தாண்டின் ஆரம்பம் இருந்தது. ஆயினும், கிறிஸ்தவ நாட்காட்டியின் அடிப்படையில் ஜனவரி முதல் நாள் புத்தாண்டாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நாள்காட்டி காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டு ஒழுங்குபடுத்தி வரப்பட்டிருக்கிறது.

உரோம சக்கரவர்த்தி யூலியசு சீசர் அவர்கள் கி.மு. 45 ஆம் ஆண்டு ஒரு புதிய நாள்காட்டியை அறிமுகப்படுத்தினார். அதற்கு யூலியன் நாள்காட்டி என்று பெயர். அதற்கு முந்தி ஒரு ஆண்டில் பத்து மாதங்களும் 304 நாள்கள் மட்டுமே இருந்தன.

கிறிஸ்தவ பாதிரிமார்கள் தங்களது அரசியல் நோக்கங்களுக்காக நாள்காட்டியில் உள்ள நாள்களையும் மாதங்களையும் கூட்டியும் குறைத்தும் சமயத்துக்கு ஏற்றவாறு பயன்படுத்தினார்கள்.

சில சமயங்களில் கையூட்டு வாங்கிக் கொண்டு ஆண்டை நீட்டியும் குறைத்தும் காட்டினார்கள். யூலியஸ் சீசர் அந்தக் குளறுபடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

தனது பெயரில் ஒரு மாதத்தைக் கூட்டினார். அவர் கணித்த நாள் குறிப்பு கிபி 1,500 வரை பயன்பாட்டில் இருந்தது. கிமு 45 ஆம் ஆண்டில் நாள்காட்டியைத் திருத்தி அமைத்ததால் அந்தக் குழப்ப ஆண்டு மொத்தம் 445 நாள்களைக் கொண்டிருந்தது.

அதன் பின் கிரிகோறியன் (Gregorian) நாள்காட்டி நடைமுறைக்கு வந்தது. ஆனால் கிபி 1900 வரை பழைய நாள்காட்டியை கிரேக்கம், உருசியா போன்ற நாடுகள் கைவிடவில்லை. இன்றும் உருசியாவின் பழைமைவாத தேவாலயங்கள் யூலியன் நாள்காட்டியைத்தான் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றன.

யூலியன் நாள்காட்டி ஒரு ஆண்டில் 365 கால் நாள்கள் இருப்பதாக கணக்கிட்டது. கணக்கைச் சரிசெய்ய நாலாண்டுக்கு ஒருமுறை (Leap Year) ஒரு நாள் பெப்ரவரி மாதத்துக்குரிய நாள்களோடு கூட்டப்பட்டது.

ஆனால் உண்மையில் ஒரு ஆண்டு 365 நாள்கள், 5 மணி, 49 நிமிடம், 12 வினாடியைக் (365.2424) கொண்டது. இதனால் ஒரு புதிய சிக்கல் உருவாகியது. 128 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நாள் வித்தியாசம் ஏற்பட்டது. எனவே 1582 இல் போப் கிரிகோறியன் அதைச் சரிசெய்ய 10 நாள்களைக் குறைத்தார். அதன் பின்னர் 400 ஆல் பிரிக்கக் கூடிய நூற்றாண்டுகளில் (1700, 1800, 1900) ஒரு நாள் கூட்டப்பட்டது. ஆனால் 2000 இல் கூட்டப்படவில்லை.

அப்படியும் கி.பி. 4,000 அல்லது 5,000 ஆண்டளவில் 12 நாள்கள் வித்தியாசம் ஏற்பட்டுவிடும் எனத் தெரியவந்தது. எனவே இந்தத் தொல்லையில் இருந்து விடுபட 1972 ஆம் ஆண்டு அணு மணிப் பொறி ஒன்றைக் கண்டு பிடித்தார்கள். அது காட்டும் நேரமே உலகத்தின் முறைமைப்பட்ட (official) நேரம் என எல்லா நாடுகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

வரலாற்றில் எகிப்தியர்கள்தான் முதன் முதலில் ஒரு ஆண்டில் 365 நாள்களைக் கொண்ட நாள்காட்டியை கி.மு. 4236 இல் கண்டு பிடித்ததாகச் சொல்லப்படுகிறது. ■

# ‘புதுவருடம் - 2024’ சிறப்பிதழ்



# வான வேடிக்கைகளோடு புத்தாண்டை முதலில் வரவேற்றது நியூசிலாந்து!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

உலகில் முதல்முதலாகப் புத்தாண்டு பிறந்துள்ள நாடாக நியூசிலாந்து காணப்படு கிறது. இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் 7 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் வித்தியாசம் உள்ளது. இது போல் இரண்டாவதாகப் பசிபிக் நாடான கிரிபாட்டியும் (6 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் வித்தியாசம்) மூன்றாவதாக ஆஸ்திரேலியாவும் (5 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் வித்தியாசம்) புத்தாண்டைக் கொண்டாடியுள்ளன.

2024 ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. புத் தாண்டு கொண்டாட்டங்கள் முழு வேகத்தில் நடந்துகொண்டிருக்கின்றன.

புதிய ஆண்டை முதன்முதலாக வரவேற்றது நியூசிலாந்து. அதைத் தொடர்ந்து ஒரு மணி நேரம் கழித்து புத்தாண்டைக் கொண்டாடியது பசிபிக் நாடான கிரிபாட்டி. மூன்றாவதாக ஆஸ் திரேலியா கொண்டாடியது.

ஆஸ்திரேலியா நகரத்தின் புகழ்பெற்ற வானவேடிக்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் சிட்னியில் கூடினர்.

ஆஸ்திரேலியாவில் 2024 புத்தாண்டு கொண்டாட்டம், இரவை பகலாக்கிய வான வேடிக்கை நிகழ்ச்சிகள் சிட்னி நகரில் காண் போரை வியக்க வைக்கும் வகையில் பிரம்மிப் பூட்டும் வான வேடிக்கை நிகழ்ச்சிகள் அரங் கேறின.


சிட்னியின் வானவேடிக்கை அதன் துறைமுகப் பாலம், ஓபரா ஹவுஸ் மற்றும் அதன் புகழ்பெற்ற துறைமுகத்தில் நடைபெற்றது.

ஆஸ்திரேலியாவில் 2024 புத்தாண்டு கொண்டாட்டத்தில் இரவை பகலாக்கிய வான வேடிக்கை நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்தன.

உலகம் முழுவதும் 2024 புத்தாண்டை வரவேற்றுள்ளது. அந்த வகையில் ஆஸ்தி ரேலியா முதன் முதலில் புத்தாண்டு பிறந் துள்ளதைக் கொண்டாடியது. இங்குள்ள சிட்னி நகரில் ஒவ்வொரு ஆண்டும் வெகு விம ரிசையாக புத்தாண்டு கொண்டாட்டங்கள் நடைபெறும்.

இதைக் கண்டு ரசிப்பதற்காகவே உலகம் முழுவதும் இருந்து அதிக எண்ணிக்கை யிலான சுற்றுலா பயணிகள் ஆஸ்திரேலியா வுக்குச் செல்கின்றனர். அந்த வகையில் சிட்னி நகரில் புத்தாண்டு கொண்டாட்டம் களை கட்டியது.

அங்கு 2024 ஆம் ஆண்டை வரவேற்கும் விதமாக வண்ண, வண்ண வான வேடிக்கை களுடன் இரவைப் பகலாக்கும் வகையில் வானத்தில் ஒளி வெள்ளம் பரவியது. இதில் காண்போரை வியக்க வைக்கும் வகையில் பிரம்மிப்பூட்டும் வான வேடிக்கை நிகழ்ச்சிகள் அரங்கேறின. இதனைக் கண்டு ரசித்த மக்கள், தங்களுக்குள் புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டு 2024 ஆம் ஆண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 01.01.2024




இன்று உங்கள் மனதில் ஏற்படும் பதட்டத்தையும் பாதுகாப்பின்மை உணர்வையும் கட்டுப்படுத்த வேண்டும். அவநம்பிக்கை எண்ணங்களை வளர்க்காதீர்கள். இன்று சாதகமான நாளாக இருக்கும். நம்மால் சாதிக்க முடியும் என்று எண்ணுங்கள்.

உங்கள் பணிகளை ஆற்ற முடியும் என்ற உறுதி உங்களிடம் காணப்படும். இந்த உணர்வின் மூலம் தடைகளை தாண்டி செயல்படுவீர்கள்.

உங்கள் துணையை இன்று சமாதானப் படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். தேவையற்ற விஷயங்களை பேசுவதை தவிருங்கள்.

இன்று பணவரவிற்கான சாத்தியம் இல்லை. அதிக செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.




இன்றைய நாள் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை முன்கூட்டியே திட்டமிட வேண்டும். சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது ஏற்றதல்ல.

இன்று பணியில் சில தைரியமான முடிவுகள் எடுப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

எளிய விஷயங்களைக் கூட தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது இன்றைய நாளின் மகிழ்ச்சியையும் திருப்தியையும் பாதிக்கும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது. இன்று அதிக செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.




இன்று மகிழ்வுடன் இருப்பீர்கள். மனதில் தெளிவு இருக்கும். உங்கள் திறமைகளை அறிந்து அதனை சிறந்த தகவல் பரிமாற்ற முறையில் வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் மேலதிகாரியிடமிருந்து உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள். பணியில் உங்கள் தனித்தன்மையைக் காட்டுவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நேரத்தை கழிப்பீர்கள். உங்கள் துணையை நண்பர்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்வீர்கள். அவரின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் அதிகப் பணம் காணப்படும். அதனை சிறப்பான முறையில் சேமிப்பீர்கள்.

இன்று முழு ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தேக ஆரோக்கியமும் ஆற்றலும் சிறந்து காணப்படும்.




இன்றைய நாளை ஆன்மீக ஈடுபாட்டிற்கு பயன்படுத்துங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு ஒன்றே திருப்தி காண சிறந்த வழி ஆகும்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. அதிக பணிகளை எதிர்கொள்ள நேரும். இதனால் பதட்டம் சிறிது அதிகரிக்கும்.

உங்கள் துணையுடனான அனுகுமுறையில் சிறிய விஷயங்களையும் தீவிரமாக பார்ப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பிரச்சினை நிறைந்திருக்கும். அதிகரிக்கும் செலவினங்கள் கவலையை அளிக்கும். தேவையற்ற பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நெருங்கிய நண்பர்களின் ஆலோசனை பெறுதல் நல்லது. இதன் மூலம் நட்பின் சிறப்பையும் நீங்கள் உணர முடியும்.

இன்று பதட்டம் காணப்படும். நல்ல பலனைப் பெற இன்று திறமையாக திட்டமிட வேண்டும்.

மனதில் காணப்படும் மகிழ்ச்சியின்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உற்சாகத்தை வெளிப்படுத்த முயலுங்கள்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய வேண்டியிருக்கும். இது கவலையை ஏற்படுத்தும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி மற்றும் முதுகு வலி காணப்படும். ஆரோக்கியமாக இருக்க அமைதியுடன் இருக்க வேண்டும்.




இன்று காணப்படும் கடினமான சவால்களை நீங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆன்மீக ஈடுபாடு வெற்றியை அளிக்கும். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப்படியான பணிச்சுமை காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க நேரும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை இழக்க நேரலாம். இது உங்கள் துணையுடனான உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

உங்கள் தேவைகேற்ப பணம் கிடைக்க இயலாது. மருத்துவ செலவுகள் காணப்படும் இது தவிர்க்க இயலாதது.

அதிக சிந்தனை தலைவலியை ஏற்படுத்தும். எதையும் சகஜமாக எடுத்துக் கொண்டு அமைதியாக இருப்பது நல்லது.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்கள் ஆர்வங்களை மேம்படுத்தும் பல வாய்ப்புகள் கிடைக்கும். பயனுள்ள முடிவுகள் எடுக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்தலாம்.

பணியிடத்தில் வெற்றி காண்பீர்கள். பணிகளை குறித்த நேரத்திற்கு முன்பே முடிப்பீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்கள் துணையுடன் சேர்ந்து இன்றைய நாளை சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்வீர்கள்.

உங்களின் கடின உழைப்பு காரணமாக இன்று உங்களுக்கு அதிக பண வரவு கிடைக்கும்.

இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள்.




இன்று வளர்ச்சி காண்பீர்கள். கடினமான செயல்கள் கூட இன்று எளிதாகச் செய்வீர்கள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று அர்ப்பணிப்புடன் பணி செய்வீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக பணிகளை திறமையாக செய்து முடிப்பீர்கள்.

இன்று நீங்கள் சம நிலையோடு இருப்பீர்கள். உங்களின் இந்த மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இந்த அணுகுமுறை உறவில் நல்லிணக்கத்திற்கு வழி வகுக்கும்.

பிதுரார்ஜித சொத்து அல்லது கடன் மூலம் பண வரவு ஏற்படும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்த இந்த நாளை பயன்படுத்தலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் உங்கள் மனதில் நம்பிக்கை உணர்வை வளர்த்துக் கொள்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.01.2024

**தனுசு**

ஆன்மீக விழிப்புணர்வு இன்று உங்களுக்கு ஆறுதலையும் வளர்ச்சியையும் தரும். இன்றைய நாளை மகிழ்ச்சியாக நீங்கள் வழி தேடுவீர்கள். விரைவான முடிவுகளால் முன்னேற்றம் கிடைக்காது என்பதால் அதனை தவிர்க்க வேண்டும்.

உங்கள் அன்றாட பணிகளை கையாளும் போது கவனம் தேவை. பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் அகந்தைப் போக்கை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். உங்கள் துணையிடம் மனம் திறந்து உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

**கும்பம்**

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் பணிகளை எளிதில் முடிப்பீர்கள். உங்களுக்கான பணிகள் கடினமாக இருந்தாலும் அதனை எளிதாக முடிப்பீர்கள்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படுகின்றது. உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அர்ப்பணிப்பு உணர்வுடன் நடந்து கொள்வீர்கள். உங்களின் இந்த நேர்மறை அணுகுமுறை காரணமாக நீங்கள் பிறருக்கு எடுத்துக்காட்டாய் இருப்பீர்கள்.

உங்களின் கடின உழைப்பு காரணமாக உங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகை வகையில் பணம் கிடைக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது.

**மகரம்**

இன்று ஆன்மீக விழா மற்றும் சொற்பொழிவுகளில் கலந்துகொண்டு திருப்தியடைவீர்கள். பிரார்த்தனையில் ஈடுபடுவீர்கள். அது உங்களுக்கு ஆறுதல் தரும்.

பணியில் பதட்டம் காணப்படும். பணியிடத்தில் சூழ்நிலையை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். பணிகளை அதன்படி திட்டமிட வேண்டும்.

மன அழுத்தம் மற்றும் விரக்தியை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இதனைத் தவிர்த்தல் நல்லது.

இன்று பண நஷ்டத்திற்கான வாய்ப்பு உள்ளது. பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டியது அவசியம்.

முதுகு வலி மற்றும் தலை வலி ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

**மீனம்**

இன்றைய நாள் இனிமையான நாளாக இருக்கும். இசை மற்றும் மந்திரங்கள் ஜபிப்பது மனதுக்கு ஆறுதல் மற்றும் அமைதி அளிக்கும். அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடச் சூழல் சுமுகமாகவும் திருப்தியாகவும் இருக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். கணிசமான வங்கியிருப்பை பராமரிப்பீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.

